முருகப்பெருமான் துணை

**மகான் மச்சமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.03.2024**, சனிக்கிழமை

1. தருமராஜனே ஆறுமுக அரங்கா
தரணியில் உன்பெருமை கூறி
பெருமைபட துல்லிய ஆசிதனை
புகலுவேன் சோபகிருது சேல்திங்கள்
2. திங்களிலே மூவைபீர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 17ம் நாள், 30.03.2024, சனிக்கிழமை)
தேசிகன் கேட்க மச்சமுனிவர் யானும்
இங்கனமே ஓங்கார உலகம் அமைய
இயம்பிடுவேன் உலகோர் நலம்வேண்டி
3. வேண்டியே ஞானிகளை வணங்கும்
வேலவனார் பூசைமுறை தன்னை
உண்டான தொண்டர் பெருமக்கள்
உலகத்தில் முழுமதி காலம்தனில் செய்து
4. செய்துமே அரங்கமகான் வழி
செப்பிட தொண்டுகள் செய்துவர
மெய்ஞானம் தரும் திருவடி தீட்சை
மேலான அரங்கனிடம் ஏற்று
5. ஏற்றுமே ஞானிகள் நாமசெபம்
எல்லா நாளும் செய்துவர
உற்றதொரு அன்னதான சேவை
உயர்வாய் உலகோரும் ஏற்று
6. ஏற்றுமே தரும சாலைகளை
எல்லா தேசங்களிலும் துவக்கி
உற்றதொரு அன்னதானம் தனை
உலகமெங்கும் பசிபிணி விரட்டும் வண்ணம்
7. வண்ணமுடன் சேவை பெருகி
வல்லமைபட உலகம் எங்கிலும்
அண்ணல் அரங்கன் ஆசிபெருக
அகிலமே பாதுகாப்பு காண்கும்

8. காண்கவே ஞானிகள் படை
கலியுகம் தன்னில் பெருக
ஆன்மீக ஞானஅரசியல் களமாக
அகிலமெங்கும் சக்திநிலை பெருகி
9. பெருகியே கலியிடர்கள் அனைத்தும்
பேருலகை விட்டு விரட்டும்படி
வருங்காலம் தருமவான்கள் நிறைந்த
வல்லமையான ஞானத்தலைமை
10. தலைமை நிறைந்த ஞானஆட்சியாக
தனிப்பெருங் கருணை வடிவாக
ஊழல் கயமை வஞ்சமில்லாத
உயர்வான ஞானவான்கள் கூடிய
11. கூடிய நல்லோர் ஆட்சியாக
குருபரன் தரும் ஆற்றல்மிக்க
இடரில்லா ஞானிகள் ஆட்சியாக மாற்றம் காணும்
இயம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–